# இந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(ஒரு நிருபர்)

கரூர், ஜூலை 21.

இவ்வூர் தமிழர் கழக ஆதரவில் அமராவதி ஆறு ரயில் பாலத்துக் கருகாமையில் 20-7-38-ம் தேதி மாலை ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு காஞ்சி பரவஸ்து ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் சுல்தான் பக்தார், மாணிக்க வாசகம் ஆகியவர்கள் "தமிழர் கடமை" என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

பின் தலைவர் தமது முடிவுரையில் தமிழர்களின் பண்டைய மேன்மையையும், இன்றைய சீர்கேட்டையும் பற்றி மிக விளக்கமாகப் பேசினார்.

சிலர் கேட்ட கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில் கூறினார். பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.